**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 345/2012

Deposition Of Witness for

Prosecution PW 2
Defense
Court

Name: சிந்தாமதார்

Husband Name / Father's Name: முகைதீன்பிச்சை

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of May 2019.

நான் களக்காட்டில் வசித்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. கடந்த 21.05.2011ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் எதிரி முருகன், கண்ணன் ஆகியோர் முகமது அலியார் கடையில் தகராறு செய்து அவரது கடையில் இருந்த பாய்லரை தள்ளிவிட்டு அவருக்கு காயத்தை ஏற்படுத்தி, பின்னர் சாட்சி முகமது அலியாரை ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துவிட்டு கையெழுத்து காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 முகமது அலியார் எனது மாமா ஆவார். எதிரி முருகன், கண்ணன் தகராறு செய்ததை பற்றி போலிஸ் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். நான் இந்த சம்பவம் குறித்து இரவு 7.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு சென்று நான் தான் புகார் கொடுத்தேன். புகார் மனு நான் தான் எழுதி கொடுத்தேன். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. பார்வை மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று உங்களுக்கு தெரியாது என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டிருப்பேன். காவல்நிலையத்தில் ஒரு கையொப்பம் தான் போட்டு கொடுத்தேன். நான் களக்காட்டில் குடியிருக்கிறேன். சம்பவம் நடந்த ஊரில் நான் குடியிருக்கவில்லை. பார்வை மகஜரில் நீங்கள் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அ.சா.1 உங்கள் மாமா என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.